கிண்டியில் பாம்புகள் பூங்கா

* 389 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டியில் பாம்புப் பூங்கா அமைப்பதற்கு அரசு நிலம் வாங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

அரசுப்பேருந்துகளில் முடவர்களுக்கு இலவசப் பயணம்

* 390 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகர அரசுப் பேருந்துகளில் நடக்க முடியாத முடவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய செயற்குறிப்பு அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முடவர் ஒருவர் தமது உடல் ஊனத்திற்கான சிகிச்சை பெறுங்காலத்து சென்னை மாநகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யலாம். ஆனால், அவர், அவரது உறுப்பு இழப்பு அல்லது ஊனம் குறித்து அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்புகள் வாதத்தினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து சர்ஜன் ஒருவரிடமிருந்து சான்றிதழ் ஒன்றையும் அவர் சிகிச்சை பெற்று வருகிறார் என்று குறிப்பிடும் மருத்துவ மனைச் சீட்டு ஒன்றையும் அல்லது மருத்துவரின் சான்றிதழ் ஒன்றையும் காண்பிக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, முடவர்கள், கண் தெரியாதவர்கள் ஆகியோர் சிகிச்சைக்குப் போகும்போது பஸ்களில் இவர்களுக்கென்று சில இடங்களை ஒதுக்கி வைக்க அரசு முன்வருமா ?

(மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத்தகையவர்களுக்கு பொதுமக்களே மனிதாபிமானத்தோடு இடம் அளிப்பார்கள் என்பதனால் இதற்காக தனிப்பேருந்து நிலைகள் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இத்தகையவர்கள் மருத்துவர்களிடம் இருந்து சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும் என்றார்களே, முடவர்கள்,